JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 734/2025 |
| | : | Prosecution P.W –7 |
| NAME | : | மாடசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

முதல் விசாரணை

நான் தற்போது கடையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2025ம் தேதி நான் சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது காலை 10.00 மணிக்கு கல்யாண சுந்தரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 318/2025 பிஎன்எஸ் பிரிவுகள் 331(3),305(a) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி **முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யபடுகிறது.** அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நேரம் நாள் விதத்தில் புகார் மனு

பெறப்படவில்லை என்றாலும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார் மனுவையும். முதல் தகவல் அறிக்கையையும் யார் மூலமாக தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் நிலைய காவலர் ஒருவர் மூலம் அனுப்பினேன். அவர் பெயர் ஞாபகம் இல்லை. எந்த தேதியில், எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் 11.09.2025 அன்று 11.00 மணிக்கு கொடுத்தேன். நீதிமன்றத்தில் 13.09.2025 அன்று 02.50 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க கற்பனையான ஒரு சம்பவத்திற்கு பொய்யாக புகார் மனு பெறப்பட்டு இந்த புகார் மனுவின் பெயரில் பின் யோசனை செய்து இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 734/2025 |
| | : | Prosecution P.W - 6 |
| NAME | : | கருப்பையா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி சங்கரகுருவம்மாள் என்பவரை தெரியும். அவர் என்னுடைய மனைவி. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 11.09.2025 ம் தேதி மதியம் 02.00, 02.15 மணியளவில் போலிசார் என் வீட்டிற்கு அருகே உள்ள கல்யாண சுந்தரம் என்பவரது வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பக்கத்தில் இருக்கும் வீடுகளையும் பார்வையிட்டு படம் வரைந்து கொண்டார்கள். அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் என் மனைவியும், சாட்சி கையொப்பம் செய்தாள். மேற்படி பார்வை மகஜர் அசாஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. கல்யாண சுந்தரம் என்பவரது வீட்டில் நகைகள் களவு போனது சம்பந்தமாக போலிசார் அங்கு வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போதும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திலும் கொத்தனார் வேலை தான் பார்த்தேன். நான் தான் கான்ட்ரக்டர். காலை 8.30 மணிக்கு சென்று மாலை 7.00 மணிக்கு வருவேன். அசா.1 கல்யாண சுந்தரம் எனக்கு உறவினரா என்றால் இல்லை, எதிர் வீட்டுக்காரர். என் மனைவி இல்லத்தரசியாக இருக்கிறாள். நானும், என் மனைவியும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலிசார் அந்த சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்து கையெழுத்து வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அசா.1 என்னையும், என் மனைவியையும் சேர்ந்தமரம் காவல்நிலையத்திற்கு கூட்டு சென்று அங்கு எழுதி தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பார்வை மகஜரில் நானும், எனது மனைவியும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் இரண்டு கையெழுத்துகளிலும் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 734/2025 |
| | : | Prosecution P.W - 5 |
| NAME | : | மாடசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் உறவுக்காரரான கல்யாண சுந்தரத்தின் வீடு என் வீட்டிற்கு எதிரே உள்ளது. ஆஜர் எதிரி அங்கு வரும் போது நான் அவரை பார்த்துள்ளேன். அசா.1 கல்யாணசுந்தரம், அசா.2 வசந்தமல்லிகா ஆகியோர்களை தெரியும். கடந்த 9 வது மாதம் 10 ம் தேதி 2025 ம் வருடம் மதியம் 2.45 மணிக்கு நான் வயலுக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்தேன்.ஆஜர் எதிரி அசா.1 கல்யாண சுந்தரம் என்பவரது வீட்டிற்குள் சென்றார். ஆஜர் எதிரி கருப்பு கலர் பேக் ஒன்று வைத்திருந்தார். அசா.1 கல்யாண சுந்தரத்தின் மனைவி தென்காசிக்கு அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டு வந்தார். நான் அவரை பார்த்தேன். பின்னர் 4.30 மணியளவில் பஸ் வரும் நேரம் 05.00, 05.15 மணியளவில் அசா.1 கல்யாண சுந்தரத்தின் வீட்டிற்கு முன்பு கூட்டமாக இருந்தது. நான் என்ன என்று விசாரித்த போது கல்யாண சுந்தரத்தின் வீட்டில் நகைகள் காணாமல் போனது எனபேசிக் கொண்டிருந்தார்கள். போலிசார் என்னை

விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 8 மரக்கால் விதைப்பாடு நிலம் வீரசிகாமணி பக்கத்தில் நடுவக்குறிச்சி போற வழியில் உள்ளது. என் மனைவி பீடி சுத்துகிறார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 2025 காலகட்டத்தில் என்ன பயிர் செய்தேன் என்றால் பூங்கன்று பயிரிட்டிருந்தேன். பூ எடுக்க காலை 6.30, 07.30 மணிக்கு சென்று 9.30, 09.45 மணிக்கு திரும்ப வீட்டுக்கு வருவேன். அதன் பின் வேலை இருந்தால் செல்வேன். நான் ஆக்டிங் டிரைவராகவும் வேலை பார்க்கிறேன். என்னுடைய வீடு கல்யாண சுந்தரம் வீட்டின் எதிர் வீடு. எனது மனைவி பெயர் அம்பிகா. இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் வழக்கின் புகார்தாரர் கல்யாணசுந்தம் வந்துள்ளார் என்றால் சரிதான். இன்று அவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் நேற்று நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்ல வேண்டும் என சொல்லி விட்டார்.

எவ்வாறு சாட்சி சொல்ல வேண்டும் என சொல்லி கொடுத்தாரா என்றால் இல்லை. கல்யாண சுந்தரம் எதிரியின் தாய்மாமா மகன் என்றால் உறவினர். 9.10.2025 அன்று எங்கள் வீட்டு பக்கத்தில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவ்வாறு விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன். போலிஸ் விசாரணையில் என்ன கலர் பேக் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கருப்பு கலர் பேக் என சொன்னேன். நான் என்ன கலர் பேக் என குறிப்பிட்டு சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரரான அசா.1 என்ன கலர் பேக் என அவர் போட்டோவை காண்பித்து சாட்சியம் அளிக்க என்னிடம் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. 10.09.2025 அன்று 2.45 மணிக்கு எதிரியை பார்த்தாக சொல்வது பொய் என்றாலும் எதிரி அந்த இடத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. அசா.2 வசந்த மல்லிகா சங்கரை பார்த்தாகவும் அவர் பதட்டமாக வெளியில் சென்றார் என்றும் அசா.2 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எந்த பேக்கும் கொண்டு செல்லவில்லை என்றாலும் பேக்குடன் ஆஜர் எதிரியை பார்த்ததாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் அசா.1 க்கும் இடையே உள்ளஇடப்பிரச்சினை சம்பந்தமாக எதிரியை பழிவாங்கும் விதமாக அசா.1 நீதிமன்ற ஊழியர் என்ற வகையில் ஒரு வழக்கை எவ்வாறு ஜோடிக்கலாம் என்பது அவருக்கு நன்கு தெரியும் என்பதால் அதை அனுசரித்து அசா.1 கொடுத்த பொய் புகாருக்கு நடைபெறாத ஒரு சம்பவத்திற்கு நானும் உடந்தையாக இருந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1,அசா.2 அவர்களுடைய நகைகளை அவர்கள் வீட்டுக்குள்ளேயே

மறைத்து வைத்துக்கொண்டு சிறிது மனநலம் பாதிக்கப்பட்ட இந்த எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக காவல்துறையினரின் உதவியுடன் இந்த பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் ஊரில் கிடையாது என்றாலும் நீதிமன்றத்திற்கு வந்து நான் சாட்சி சொல்லும் போது தான் ஆஜர் எதிரி யார் என்றே எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. அசா.1 தான் ஆஜர் எதிரி யார் என்றும் என்ன உறவு என்றும் அடையாளம் சொல்லிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அதற்காக தான் இன்றும் அசா.1 என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi